**செ. கு. எண்: 014** **நாள்: 29.01.2019**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

இரங்கல் செய்தி – **29.1.2019**

முன்னாள் மத்திய அமைச்சர் திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் உடல் நலக்குறைவால் இன்று **(29.1.2019)** காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்த தலைவர்களில் ஒருவராக திகழ்ந்தவர். இவர் சமதா கட்சியை தோற்றுவித்தவர். பின்னர் ஜனதா தள் கட்சியில் பல முக்கிய பதவிகளையும், பொறுப்புகளையும் வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் ஒன்பது முறை நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்பட செயலாற்றியவர் என்ற பெருமைக்குரியவர்.

அரசியல்வாதி, தொழிற்சங்கத் தலைவர், பத்திரிகையாளர் போன்ற பன்முகத் தன்மை கொண்டவர் திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள். இவர் சிறந்த நிர்வாகியாகவும் கடின உழைப்பாளியாகவும், அனைவரிடமும் அன்பாக பழகும் தன்மையுடையவராகவும் திகழ்ந்தார்.

இந்தியாவின் முன்னாள் மத்திய அமைச்சர் திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களின் மறைவு இந்தியாவிற்கே ஒரு பேரிழப்பாகும். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது தொண்டர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**